உ

வேலுமயிலுந்துணை.

மூடமதிதிரவுகோல்.

இவை-திருமணலூர்

முனுசாமிமுதலியாரால்

யியற்றியதுடன்

முன்னோர்கள் மொழிகளும் பாடலுஞ்சேர்த்து

சென்னை - இட்டா

பார்த்தசாரதிநாயுடு

அவர்களாற் றமது

ஸ்ரீ பத்மநாபவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

நெ. 1. திருப்பள்ளிசந்து பெத்துநாய்க்கன்பேட்டை.

MADRAS.

1898.

உ

கடவுள் துணை,

மூடமதி திரவுகோல்

எத்தொழிலைசெய்தாலும் ஏதவத்தைபட்டாலும்
முக்தர்மனமுருக்கும் மோனத்தே—வித்தகமாய்
காதிவிளையாடியிருகைவீசிவந்தாலும்
தாதியனம்நீர்குடத்தேதான்.

விருத்தம்,

ஏதப்பாபெண்டாலாவதென்ன
யீன்றெடுத்தபிள்ளைகளாலாவதென்ன
கோதப்பாவிந்தினாலாவதென்ன
கொண்டதினால் கொடுப்பதினாலாவதென்ன
வாதப்பாசொல்லிநிதம் அலைந்தேதேடும்
மகத்தானதிரவியத்தாலாவதென்ன
போதப்பாபோதம்யென்ற போதம்பார்த்தால்
பொருளானகுலாயமுண்டுபுகழ்ந்துகொள்ளே

சிந்து பல்லவி,

கருமம்விடாது பூர்வஜென்மத்தில் நீசெய்த
பாவம்விடாது ஒருவர்க்குநீசெய்த
தோஷம்விடாது

அநுபல்லவி:

சிரசைமழுங்கடித்து ஸ்தலமெல்லாந்திரிந்தாலும்
தாடிசடைவளர்த்து குருவென்று அலைந்தாலும்
இரவும்பகலும்ஜெப மாலையையிழுத்தாலும்
ஈசனுன்தலையில் யெழுதினபடியல்லால் (கரு)

சரணங்கள்,

காலைமாலைமூன்று வேளையுங்குளித்தாலும்
கட்டாகவிபூதி பட்டையாயடித்தாலும்
தாளாந்திரக்காயல் மந்திரம்படித்தாலும்
தலையின்மேல்நான்முகன் யெழுதினபடியல்லால் (கரு)

காவடிதூக்கினி காசிக்குப்போனாலும்
கண்மூடிவாய்மூடி மௌனமாயிருந்தாலும்
தேவாலயங்கட்டி திருவிழாச்செய்தாலும்
தீக்கோட்டைநடுவிலே யாகம்வளர்த்தாலும் (கரு)

தீர்த்தமுழுதுங்கண்டு ஸ்நானங்கள்செய்தாலும்
தெரியாமல்குகைக்குள்ளே திருடன்போலிருந்தாலும்
பார்த்தவர்பிரமிக்க வேடங்களபூண்டாலும்
பகலுமிரவும்தினம் விரதங்களிருந்தாலும் (கரு)

கஞ்சாவபினிதின்று காஷாயம்பூண்டாலும்
காடேநித்தியமென்று மரவுரிதரித்தாலும்
தஞ்சமாய்குருவடி பணிவிடைசெய்தாலும்
றன்னையறியவென்று மலையேறிப்போனாலும் (கரு)

ஊசிநாட்டிகாலை ஊன்றிகொண்டிருந்தாலும்
யோகத்தடியின்மீது சவம்போலேகிடந்தாலும்
பேசாமல்மலையேறி பெருந்தவசெய்தாலும்
பெண்டுபிள்ளைகளென்ற சந்ததையைமறந்தாலும் (கரு)

திருப்பதிமலையேறி தலைமொட்டையடித்தாலும்
ஸ்ரீரங்கம்தனிற்சென்று தெருவெல்லாமுருண்டாலும்
விரதங்கொண்டாலு வேதத்தைபடித்தாலும்
விட்டோடும் ஆவினை தாவிபிடித்தாலும் (கரு)

அக்கினிபந்துபண்ணி　　அழலுக்குள் அருந்தாலும்
அல்லாமல்ஜெலத்திலே　　தெப்பைபோமிதந்தாலும்
திக்கெட்டுதிசைகட்டி　　சித்துகள் ஆடினும்
தீண்டினபொருளெல்லாம்　　பொன்னாகச்செய்தாலும்(கரு)

காளிகூளிகளெல்லாம்　　வசியமாய்போனாலும்
காட்டேரிசாத்தானே　　யேவலாய்கொண்டாலும்
யாளிபோல் ஆகாசக்　　குளிகையேகற்றாலும்
யாருக்குந்தெரியாமல்　　உருமாரிதிரிந்தாலும்(கரு)

துளசிமணியைக்கோர்த்து　　தாவடம்பூண்டாலும்
தூங்காமலசிலநாளைக்　　கருகண்டம்பூண்டாலும்
அளவற்றமந்திரம்　　ஆத்தோரம்செபித்தாலும்
அன்னமும்சொர்ணமும்　　அள்ளியிரைத்தாலும்(கரு)

அல்லா அல்லாவென்றுநீ　　யெழுகடலலைந்தாலும்
யில்லாமலரகிமானே　　மரவாமல்தொழுதாலும்
வல்லவன்யேசென்று　　வாய்கொண்டுஅழுதாலும்
வாட்டுதவளைப்போல்　　சன்யாசம்பூண்டாலும்
தாளேசபலமென்று　　வாயடித்திரிந்தாலும்
பொன்வெள்ளிசெய்தாலும்　　புசியாமலிருந்தாலும்
போதிக்குங்குருவென்று　　மடத்துக்குள்ளிருந்தாலும்(கரு)

உலகத்தில்வெகுகோடி　　மூடமதிகளுக்கும்
உண்மையொன்றில்லாத　　பொய்யர்க்கும்பேயர்க்கும்
சகலர்க்குந்தெளிவாக　　சிறுமணவூர்முனிசாமி
சாற்றியதிராவகோல்　　பாராதவெரியர்க்கும்] கருமம்

——(*)——

சிவவாக்கியம்.

காணவேணுமென்றுநீர் கடல்மலைகளேறுவீர்
ஆணவமதல்லவோ அறிவில்லாதமூடர்கள்
வேணுமென்றேயீசர் பாதம்மெய்யுளேவிளங்கினால்
காணலாகும்நாதனைக் கடந்துநின்றசோதியை க

ஓடி யோடி யோடி யோடி உட்கலந்தசோதியை
நாடி நாடி நாடி நாடி நாள்களும் கழிந்துபோய்

வாடி வாடி வாடி வாடி மாண்டுபோனமானிடர்
கோடி கோடி கோடி கோடி யெண்ணிறந்தகோடியே ௨

தூர தூர தூர மென்று சொல்லியோடும்வீணரே
பாரும்விண்ணும்யெங்குமாய் பறந்தமெய்ப்பராபரம்
ஊருநாடுகாடுபோ யுழன்றுதேடவேணுமோ
னேரதாகவும்முளே நினைத்தறிந்துகொள்ளுமே ௩

நட்டுவைத்ததேவரும் நடாமல்வைத்ததேவரும்
சுட்டுவைத்ததேவரும் சுடாமல்வைத்ததேவரும்
கட்டிவைத்தபுத்தகக் கதைகளின்புரட்டெலாம்
பெட்டதாய்முடிந்ததே பிள்ளையானிருந்தபின் ௪

நட்டகல்லைதெய்வமென்று நாலுபுட்பஞ்சாற்றுகீர்
சுற்றிவந்துமொணமொணென்றுசொல்லுமந்திரமேதடா
நட்டகல்லும் பேசுமோநாதனுள்ளிருக்கையில்
சுட்டசட்டிசட்டுவங்கறிச்சுவையறியுமோ ௫

ஓசைபெற்றகல்லை நீ உடைத்துருக்கள்செய்கிறீர்
வாசலிற்பதித்தகல் மழுங்கவும்மிதிக்கிறீர்
பூசைபெற்றகல்லிலே பூவும்நீரும்சாற்றுகீர்
யீசனுக்குகந்தகல் லிரண்டுகல்லுமல்லவே ௬

பண்டுநான்பறித்தெறிந்த பன்மலர்களெத்தனை
பாழிலேசெபித்துவிட்ட மந்திரங்களெத்தனை
மிண்டனாய்த்திரிந்தபோ திரைத்தநீர்களெத்தனை
மீளவுஞ்சிவாலயங்கள் சுத்திவந்ததெத்தனை
அண்டர்கோனிருப்பிடம் அறிந்துணர்ந்தஞானிகள்
கண்டகோவில்தெய்வமென்று கையெடுப்பதில்லையே ௭

விருத்தம்

எத்தனைதான் கல்லுகளைப்பூசித்தாலும்
ஈனர்களேஉங்களுக்குமோட்சமுண்டோ
சுத்தமுடன்தலைமுழுகித் தவஞ்செய்தாலும்
சொல்லரியபேரின்பந்தோன்றுமோதான்
பித்தர்களேகல்லுகளை விலைக்குவாங்கி
பிறனென்றசிலையிலேமுடிந்துகொண்டு
செத்தபின்புகயிலாயம் சேர்வோமென்றால்
சேர்வதில்லை அருநரகம்சேர்வீர்தானே ௧

சற்குருவை அறியாமலுலகிலேதான்
　　சண்டாளர் கல்லுகளைத் தெய்வமென்று
பொய்குருக்கள்சொன்னபுத்திதன்னைக்கேட்டுப்
　　பூசைசெய்துகல்லுகளைப் போற்றிசெய்வார்
சொற்குருக்கள்தங்களுட செய்திகேட்டால்
　　சொர்க்கமுண்டோ நரகமல்லால்செல்லும்போது
சற்குருவை அறிந்தவருக் குடனேமோட்சம்
　　சாருமென்றேமுன்னோர்கள் சாற்றினரே. [illegible]

கருப்பேய்கள்காப்பேய்கள் காமப்பேய்கள்
　　கனதனத்துப்பொருட்பேய்கள் கருணையில்லா
மருட்பேய்கள்மனப்பேய்கள் வசனப்பேய்கள்
　　வண்மையில்லாக்குலப்பேய்கள் வாதுகூறும்
இருட்பேய்கள்சமயமத பேற்றும்பேய்கள்
　　இயலாதமந்திரங்க ளோதும்பேய்கள்
குருப்பேய்கள் தங்களுடபெருமைதன்னை
　　குவலயத்தில்கூறுவது குற்றந்தானே [illegible]

தன்னைத்தானறியாதமூடரெல்லாம்
　　தானுலகிற்குருக்களென்று பெயருஞ்சொல்வார்
பின்னைத்தான்பிறவாத னெறியுங்காணார்
　　பேசாதமந்திரத்தின் பெருமைகாணார்
முன்னைத்தான்பெரியோர்கள்சொன்ன நூலின்
　　முறைமைதனையறியார்கள் மூடரெல்லாம்
என்னத்தான்சீஷருக்கு முத்திகாட்டி
　　ஈடேறிக்கொடுப்பதுவு மியல்பில்லாரே ௯

அடியற்றமரம்போலே தெண்டனேது
　　அரகராவென்றமொழிக் கர்த்தனேது
பிடிபட்டகள்ளரைப்போல் கும்பிடேது
　　பேசாமல்பற்பலவாய் பிதற்றலேது
கொடியிட்டமரத்துக்கு சுத்தமேது
　　கும்பிட்டுகோயிலென்று குரியங்கேது
வடிவற்றசிறுவருளை மனதில்வைத்தால்
　　வண்மையுடன்பரமபதம்வாழலாமே. ௰

கடவுள் துணை.

பின்முடுகு.

ஆனந்தக்களிப்பு.

மனைவியோ உனைக்கொல்லும் யெமனடா
அவள்-யெமனடா னமனடா
பேயடாபூதண்டா (மனைவி)

கைக்கிவளையென்று மாட்டுவாள்
அவள்-கலையென்பாள் பணியென்பாள்
தலைக்கெண்ணை தாவென்பாள் (மனைவி)

உண்டிக்கேதினம்தினம் வாட்டுவாள்
நல்ல-உடையென்பாள் பணியென்பாள்
நடையென்பாள் பிடமென்பாள் (மனைவி)

பிள்ளையேஉன்காலின்விலங்கடா
அது-விலங்கடா காரடா
வலையடா உலையடா (மனைவி)

உரவேவுனைவாட்டும் புலியடா
அதுபுலியா கிளியடா
சுனையடா மலையடா (மனைவி)

பணமே உனைவெட்டும் கத்திடா
அது-கத்திடா சுத்திடா
உளியடா வாளடா (மனைவி)

முற்றிற்று.